Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC100/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கார்த்திகேயன்(SI) |
| Father's Name | – | பிச்சை |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 17th November 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட காவல்நிலையத்தில் குடிமைப் பொருள் உணவு வழங்கல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். மேற்படி பொள்ளாச்சி தாலுகா காவல்நிலையத்தில் பணியில்
இருந்த போது பொள்ளாச்சி தாலுகா காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு, ஜெபஸ்டின், அவர்களுடன் பணியாற்றி உள்ளதால் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்றாக பரிச்சயம் என்பதால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன், கடந்த 28.03.2017 ம் தேதி காலை 10.30 மணிக்கு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு,ஜெபஸ்டின் அவர்கள் நிலைய அலுவலில் இருந்த போது பொள்ளாச்சி சேரன் தொழிலாளர் காலனி, ராகவேந்திரா நகரில் குடியிருக்கும் நித்யானந்தம் என்பவரின் மனைவி லீலாதேவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.52/2017, சட்டப்பிரிவுகள. 294(பி), 323, 324, 506(ii)இதச -கீழ் வழக்குப் பதிவு செய்தார்.

அந்த முதல் தகவலறிக்கை **அசாஆ.2.** பின்னர் மேற்படி வழக்குக் கோப்பை எனது பார்வைக்கு வைத்ததை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 28.03.2017 -ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று ஆஜர் சாட்சிகள் குமாரசாமி, மயில்சாமி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அவை முறையே **அதசாஆ.3 மற்றும் அசாஆ.4** ஆகும். பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் மதியம் 12.00 மணிக்கு சம்பவ இடத்தில் எதிரியால் உபயோகப்படுத்தப்பட்ட காய் வெட்டும் கத்தி ஒன்றை கைபற்றுதல் மகஜர் மூலமாக கைபற்றினேன்.. மேற்படி கைபற்றுதல் மகஜர் **அசாஆ.5** ஆகும். பின்னர் சாட்சிகள் 1 முதல் 7 வரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.. பின்னர் கைப்பற்றப்பட்ட கத்தியை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்., **மேற்படி படிவம் 91 அசாஆ.7 ஆகும்.** மேற்படி கல் **சா.பொ.1** ஆகும்

மேற்படி எதிரி நித்யானந்தம் தலைமறைவு ஆவதற்காக வடக்கிபாளையம் பஸ் ஸ்டாப்பில் சென்று கொண்டிருப்பதாக தகவல் பெற்று சாட்சி 2 லோகநாதனுடன் சென்று சாட்சி அடையாளம் காட்ட எதிரியை 13.45 மணிக்கு வடக்கிபாளையம் பஸ் ஸ்டாப்பில் வைத்து கைது செய்தும் 14.15 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரியைக் கைது செய்து தக்க திரேக பரிசோதனை செய்தும், தக்க பாதுகாப்பில் வைத்தும் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டது.

பின்னர் 28.03.2017 அன்று காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த பொள்ளாச்சி

அரசு மருத்துவர் திரு அழகப்பசாமி அவர்களை விசாரித்ததில் அவர் அளித்த வாக்குமூலத்தில் லீலாதேவிக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றும் சான்றிதழ் கொடுத்ததின் பேரில் அவரை விசாரித்து வாக்கமூலம் பெற்றேன். மேற்படி காயச் சான்றிதழ் முறையே **அசாஆ. 6** ஆகும்.

பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், கைபற்றப்பட்ட பொருளுக்கும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.